561

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலம் தாள

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனர்.

கிளை--7 குருகுலம், மாம்பாக்கம்; செய. ஐப்பசி, கஉ 29--10--54 தளிர்--4

## திருக்குறளும் சமயமும்

அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாங்
குறியது உடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்கு
அறிவினில் அருளான் மன்னி அம்மையோ டப்பன் ஆகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

—சிவஞான சித்தி, மங்கல வாழ்த்து.

'ஆறு ஆறு வகையாக வைத்து எண்ணப்படும் புறச் சமயங்களில் நின்று பல்வேறு வகைப் பட்ட ஆராய்வார்க்கு அவரவர் காணும் முடிந்த பொருளாக இருந்து அருள்பவன் சிவ பிரானே; அவரின் வேறாகிய அகச் சமயத்தார்க்கு, அவர் நினைந்து வழிபடும் உருவம், அருவுருவம், அருவம் என வேதாகமங்களுட் கூறப்படும் தடத்தக் குறிகளையே திருமேனியாகக் கொண்டு நின்று, அருள் புரிபவனும் அப் பெருமானே; இனி, இச் சமய நெறிகளையெல்லாங் கடந்த, திருவருள் நெறி யாகிய சித்தாந்த சைவ நெறியினர்க்கு, முற்கூறிய கருத்துக்களை யெல்லாங் கடந்து, உயிர்க்குயிராய் உயிர்களின் அறிவைப் பிறப்பிக்கும் அம்மையப்பராய் விளங்கிப் பேரின்பம் பயப்பவனும் அம் முதல் வனே ஆவன். இங்ஙனம் எல்லாமாகியும் தத்துவம் கடந்த தனிப் பொருளாய், யாண்டும் கலந்து வியாபகமாய் நிற்கும் முழுமுதற்பொருள் சிவபிரான். ஆகலின், அவன் திருவடியிணையைச் சென்னி யிற் கொண்டு வழிபடுவாம்' என்பது.

இதனல் சிவநெறியின் பொதுநிலை விரிவும், மெய்ந்நிலை வரிசை நோக்கும், அவைபற்றி அதற்கு உரித்தாய தலைமைப்பாடும் உய்த்துணரப் படும். திருக்குறளும் தன்னியல்பால் இம் மூன் றையும் உடையதாம். இங்ஙனம் ஆகலின், "திருக்குறளின உட்கிடை சைவ சித்தாந்தமே" என நுதலிப் புகுதல் மிகப் பொருத்தமே யன்றே!

திருவள்ளுவர் மக்கட்கு உறுதி உணர்த்தும் முறையும் சித்தாந்த சைவம் பொருளியல்பு கூறும் முறையும் ஒற்றுமை உடையவை. இரண்டிடத்தும் பொதுநிலை விரிவும், மெய்ந்நிலை வரிசை நோக்கும் ஒருங்கே அமைந்துள்ளன. கூடி வாழ்ந்து உயர்தற்கு உரிய மக்கட்கு ஒற்றுமையும் கட்டுப் பாடும் வேண்டும் இடங்களில் விரிந்த பொதுநிலை நோக்கு இன்றியமையாததே; எனினும், உண்மை யைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் இடங்களில் மெய்ந்நிலை வரிசை நோக்கு இன்றியமையாச் சிறப் பினதாய்க் கொள்ளற்பாலதாகும். இக் கருத்துப்பற்றியே திருவள்ளுவர்,

"பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அது நோக்கி வாழ்வார் பலர்"

எனச் சுற்றந்தழுவும் உபாயங் கூறுவாராயினர். இவ்வாற்றான் எல்லாச் சமய நெறிகளையுந் தழுவி, அவற்றைத் தனக்கு உறுப்புகளாக உடையதாய், தான் மெய்ந்நிலை முடிபு உணர்த்தும் வகையில் அவற்றின் எல்லைகளைக் கடந்து உண்மையின் நிறைநிலையை எடுத்து இனிது விளக்குவது சித்தாந்தசைவமே ஆகும்.

"முல்லைக் கொடி"
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

ஆயுள்—

கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| இலை | செய, ஐப்பசி, | தளிர் |
|---|---|---|
| 7 | 29-10-54 வெள்ளி. | 4 |

# சோவியத் கல்வி முறை

-2-

## தேசிய மொழிகள்:

ரஷ்யாவில் 48 மொழிகள் பயில்கின்றன. அந்தந்த மாகாணங்களில் அதற்குரிய தாய் மொழியே முதன் மொழி. அதற்கு அடுத்தபடி ரஷ்யமொழி. தேசம், பொது விவகாரங்கள் ரஷ்யத்தில், தனித்தனி விவகாரங்கள் அவரவர் தாய் மொழியில் நடக்கும். உதாரணமாக உஸ்பெகிஸ்தானில் உஸ்பெக் மொழியே தாய் மொழி, கல்வியும் அம்மொழியிலேயே நடக்கிறது. விஞ்ஞானக்கலைகளெல்லாம் உஸ்பெக் மொழியிலேயே எழுதி அச்சிட்டிருக்கிறார்கள். உஸ்பெக் பேரகராதியைப் பார்த்து நான் மலைத்துப் போனேன். பதினாறு மந்திரிகள் கல்விப் பயிற்சியைக் கருத்துடன் போற்றி வளர்க்கிறார்கள். ஐந்தாண்டுகளில் இவர்கள் மடமையை ஓட்டி ஒவ்வொரு ரஷ்யனும் எட்டு வகுப்புகள் மட்டு மாவது படிக்கும்படிச் செய்தார்கள். பிறகு பத்தாண்டுத் திட்டம் வந்தது. ரஷ்யப் பிரஜைகள் அனைவருமே பத்து வகுப்பு வரையில் படிக்கும் படி செய்தனர். இப்போது எல்லோருமே கல்லூரிப் படிப்பு படிக்க ஏற்பாடு நடக்கிறது. நாஜிகள் படையெடுத்த போது ரஷ்யாவை அடிமைப்படுத்த முதலில் பள்ளிக்கூடங்களை அழிக்கத் தலைப்பட்டனர். 1 கோடி மாணவர் படித்த 82,000 பள்ளிக் கூடங்களை இடித்தெரிந்தனர். 334 உயர் பள்ளிகளையும் கலைக் கூடங்களையும் நூற்றுக் கணக்கான புத்தக சாலைகளையும் அழித்தனர். இந்த அட்டூழியத்திலும் ரஷ்யர் கல்விப் பயிற்சி நிற்கவில்லை. வீடுகளிலும் காடுகளிலும் பள்ளிக்கூடம் வைத்து நடத்தினர். போர் ஓய்ந்த பிறகு ஓயா முயற்சியால் சோவியத் சர்க்கார் ஏராளமான பள்ளிக் கூடங்களைக் கட்டி ஆசிரியர்களைப் பயிற்றி நாட்டில் எல்லோரும் மெட்ரிக் அளவு கல்வி கற்கச் செய்தது.

## குழந்தை இல்லம்

கல்விக்காக சோவியத் சர்க்கார் ஆறாயிரங் கோடி ரூபாய் செலவிடுகிறது. அதாவது தேச வருமானத்தில் 12 சதவிகிதத்திற்குமேல்.

ரஷ்யாவில் எல்லோரும் தொழிலாளரே. அதோ குப் குப் என்று புகைத்து இரும்பை உருக்கி யந்திரமாக்கும் தொழிற்சாலை, அங்கே வேலைசெய்யும் பெண்கள் தங்கள் குழந்தைகளை இங்கே நிம்மதியாக விட்டுச் செல்கிறார்கள். இதற்குப் பெயரே குழந்தை இல்லம் (Creche) இங்கே பத்துக் குழந்தைகளுக்கு ஒரு பண்பட்ட தாய்ச்சி இருக்கிறாள். அவளுக்கு மாதம் 800 ரூபிள் சம்பளம். அவள் உயர்ந்த கல்வியும், ஆசிரியப் பயிற்சியும், மருத்துவமும் வாய்ந்தவள். குழந்தைகள் விளையாடப் பொழுது போக்குக் கருவிகள் உள்ளன.

தாய்மார் அவ்வப்போது வந்து குழந்தைக்குப் பால் கொடுத்துச் செல்வர். அதிகப் பாலிருக்கும் தாய்மார் தமது பாலை மற்றக் குழந்தைகளுக்கும் வழங்குவதுண்டு. ஒரு வயதுக் குழந்தைகளும் இங்கே தொட்டியில் விளையாடுகின்றன. இந்தக் குழந்தைக்கு நோய் வருவதில்லை. வந்தால் அதோ அருகே குழந்தை வைத்திய சாலை காத்திருக்கிறது. இந்தக் குழந்தைகளுக்கு மூன்றாண்டு நிறைந்ததும் கிண்டர்கார்டன் பள்ளிக் கூடம் அழைக்கிறது. இதைக் குழந்தைப் பள்ளி என்போம்.

## ஆரம்பப் பள்ளி

குழந்தைப் பள்ளிக்கூடங்களில் மூன்று வயது முதல் ஏழு வரையில் உள்ள சிறுவரைப் பயிற்றுகிறார்கள். ரஷ்யாவில் சுமார் 25,000 குழந்தைப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் சுமார் 35 லக்ஷம் குழந்தைகள் வசிக்கிறார்கள். இங்கே குழந்தைகளை நாட்டுக்காகவே வாழப் பயிற்றுகிறார்கள். குழந்தைகளின் உள்ளமும் மனமும், பொறி புலன்க

ளும் உடலும், நடையும், சொல்லும், செயலும் தேசிய வாழ்விற்குப் படிந்து வரப் பயிற்றுகிறார்கள்.

அதற்கேற்ற ஆடல் பாடல்கள், படக்காட்சிகள், கதைகள், பாடங்களைப் புகட்டுகிறார்கள். திட்ப நுட்பமாக இனிமையாக உறுதியாக பேசப் பயிற்றுகிறார்கள். சித்திரம், சிற்பம், கவிதை, பாட்டு, நடனம், கூட்டுறவு, நல்லணி, ஒழுக்கம், தாய்மொழி மனிதப் பண்பு, மட்டு மரியாதை, ஒப்புரவு, நேர்மை நிதானம் எல்லாம், குழந்தைக்குப் பயிற்றுகிறார்கள். ஒரு குழந்தை கீழே விழுந்து காயம்பட்டால் இன்னொரு குழந்தை அதற்கு மருந்து போட்டு ஆற்றும். ஒரு குழந்தை நோயானால் இன்னொன்று சிகிச்சை செய்யும். குழந்தைகள் அன்பு ஆதரவாகப் பழகும். ஒவ்வொரு குழந்தைக்கும் ரஷ்ய உணர்ச்சியே உயிர்த் துடிப்பாகும். ரஷ்ய சரித்திரம் புரட்சி வீரர் கதை எல்லாம் அதற்குத் தெரியும்.

விளையாட்டாகவே குழந்தைகளுக்கு விஞ்ஞானமும் கற்பிக்கிறார்கள். மெகானோ பெட்டிகளைத் தந்து மோட்டார் முதல் விமானம் வரையில், பாலம் முதல் பங்களா வரையில் அடுக்கியமைக்கப் பயிற்றுகிறார்கள். வயதிற்கேற்றபடியே ஒவ்வொரு பாடநேரமும் இருபது முதல் முப்பது நிமிஷம் வரையில் இருக்கும். காலையில் எண் எழுத்து, பூகோளம், உலகறிவு, நுண்கலை, யந்திர மடுக்கல், மாலையில் பயனுள்ள ஆடல்கள், தோட்டவேலை பாத்தி முதலியவை நடக்கும். குழந்தைகள் நான்கு வேளை நன்றாகச் சாப்பிடுவார்கள். இராவில் கதை கேட்பார்கள். கதை சொல்வார்கள். பெற்றோர் சங்கமும் ஆசிரியருடன் ஒத்துழைத்து இப்படிக் குழந்தைகள் நல்ல பயிற்சிபெறத் துணை செய்கிறது.

## பொதுப் பள்ளிக்கூடம்

இந்தக் குழந்தைகள் அடிக்கடி நாட்டைச் சுற்றிப் பார்த்து பயன்பெற சோவியத் சர்க்கார் வசதிகள் செய்திருக்கிறது. இப்படி ஏழு வயது வரையில் படித்த பிறகு பொதுப் பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் சேர்ந்து முறையான பாடம் படிக்கிறார்கள். இது கட்டாயக் கல்வி. பெற்றோர் தமது குழந்தைகளையெல்லாம் பள்ளிக்கு அனுப்பியே தீரவேண்டும். மந்தமான குழந்தைகளைத் தெளிவுறப் பயிற்றப் பள்ளிக்கூடம் உண்டு.

பள்ளிக்கூடத்தில் ஏழு ஆண்டுகள் பயிலவேண்டும். இந்த ஏழு ஆண்டிற்குள் சிறுவரும் சிறுமியரும் தாய் மொழி, ஒரு ஐரோப்பிய மொழி, கணிதம், பூகோளம், சரித்திரம், பௌதிக, ரசாயன சாஸ்திரங்கள், செடி நூல், உடற்கூறு வைத்திய சிகிச்சை, சமுதாய ஒழுக்கம், சித்திரம், சிற்பம் இயற்கை வளமை இவற்றையெல்லாம் பற்றிக் கற்பிப்பார்கள். மாணவர் உற்சாகமாக விரும்பிக் கற்கும்படி போதனை முறைகள் அமைந்திருக்கின்றன.

மாணவருக்கு அடிக்கடி பரீட்சை நடக்கும். ஆனால் பரீட்சையில் அநேகமாக எல்லோரும் தேறிவிடுவர். போதனை முறை அவ்வளவு திறமையை அளிக்கிறது. ரஷ்யாவில் 12469 செகண்டரி ஸ்கூல்கள் இருக்கின்றன. 90,000 00 மாணவர்கள் அவைகளில் பயிலுகின்றார்கள்.

## ஏழு ஆண்டுப் படிப்பு

ஏழு ஆண்டுகள் படித்த பையனுக்கு ரஷ்ய பாஷை பூரணமாகத் தெரியும். தனது தாய்மொழியில் புலமை உண்டு. உலக இலக்கியப் பண்பையும் அவன் அறிந்திருப்பான். இயற்கை, விஞ்ஞானம், வானநூல், பூகோளம், ரசாயனம் முதலிய கலைகளில் நிபுணனாக இருப்பான். கணக்கில் அவனை மிஞ்சமுடியாது. கோட்டுக் கணிதம், எழுத்துக் கணிதம், கோணக் கணிதம், சிற்பக் கணிதம், இயந்திரக் கணிதம் இவற்றிலெல்லாம் அவன் புலமை பெற்றிருப்பான்.

நாடு முழுவதையும் சுற்றி நாட்டின் நிலைமையையும் தேவையையும் ஆட்சி முறையையும் அறிந்திருப்பான், ஆங்கிலம்,

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்
பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய ஏதாவதொரு அந்நிய மொழியை அறிந்திருப்பான்.

நிபுணத்துவப் பயிற்சி

இப்படிப்பட்ட மாணவன் ஏழு ஆண்டுகள் படித்த பிறகு இன்னும் ஐந்தாண்டுகள் படிக்கிறான். இந்த 5 ஆண்டுகளில் பொதுக் கல்வியைத் தவிர ஏதாயினும் ஒரு தொழிலின் நிபுணன் ஆகிறான். பள்ளிப் பாடம் தவிர, அவன் ஏராளமான அறிவு நூல்களைக் கற்கிறான். அதற்கேற்ற வசதிகள் அவனுக்கு இருக்கின்றன இந்த வயதில் இரண்டு பயிற்சிகளை மாணவர்க்கு அரசாங்கம் தருகிறது மாணவ மாணவிகளைச் சரியான கம்யூனிஸ்டுகளாக்க இந்தப் பயிற்சிகளைத் தருகின்றனர்.

பயனீர் காம்ப்

சிறுவர்களை சோவியத் கலைப் பண்பில் பயிற்ற ஊர் தோறும் பயனீர் காம்ப் (Pioneer Camp) இளைஞர் முகாம் உள்ளது. அது ஊருக்கப்பால் விசாலமான காடுகளில் அமைந்திருக்கும். அங்கே வசதியான கட்டிடங்கள் உண்டாம். விளையாட ஏராளமான சாதனங்கள் உண்டு. கலை வளர்ச்சிக்கு உற்சாகம் உண்டு. நான் லெனின் பயனீர் காம்பைப் பார்த்தேன். அதன் தலைவி சுற்றிக்காட்டினாள் பயனீர் காம்பிற்குள் பெற்றோர் கூட உத்திரவு பெற்றே நுழைய முடியும். அங்கே நேரந் தவறாத நடைமுறைகளும்கண்டிப்பான ஒழுக்க முறைகளும் காணலாம்.

பெற்றோர்கள் குழந்தைகளை வந்து பார்க்க ஓரிடம் உண்டு. அங்கே குழந்தைகள் பெற்றோரை வரவேற்று உபசரிப்பது காணத்தக்கது. பெற்றோர்க்கு மலர் தந்து இனிய பானந் தந்து குழந்தை தன் வாழ்வைப் பற்றிச் சொல்லும். முன்னைவிட ஒரு பவுண்டு நிறைகூட இருப்பதாகச் சொல்லும். பெற்றோர் மகிழ்வர். பயனீர் காம்பில் காலை ஆறு மணிக்கு மணியடிக்கும், எல்லோரும் எழுந்து பல்விளக்கி தேகப் பயிற்சி செய்வார்கள். அவர்கள் காலெடுத்து வீர நடை போட. பாண்டு முழங்கும்.

மாணவரே உணவு தயாரிப்பர், தட்டுகள் பரப்பி உணவு வைப்பர், சுத்தம் செய்வர். ஒன்பது முதல் பன்னிரண்டு வரையில் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப பாடல்கள் நடக்கும். பிறகு மதிய உணவு கொள்வர். பிறகு ஒரு மணி நேரம் இளைப்பாற்றம், இரண்டு மணிக்கு இசைப் பயிற்சி கலைப் பயிற்சிகள் மாலை 6-மணிக்கு நடனம், சங்கீதம், விளையாட்டுகள் நடக்கும். ஏழரை மணிக்கு உணவு. 8 மணிக்கு அபரா நாடகம், படக் காட்சி, வீரக் கதைகள், சொற்பொழிவுகள் நடக்கும், பத்து மணிக்கு மாணவர் உறங்கச் செல்வர் இரவின் இளம் வீரர் முறை வைத்து முகாமை காவல் புரிவர். இந்த முகாமில் வீரவளர்ச்சிக்கும் வீரப் பயிற்சிக்கும் முதன்மையான இடம் உண்டு. தேசமே அவர்கள் சுவாசம்.

—'தி. சுடர்'

Telegrams: "RAMBROS"

**N.Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

**COIMBATORE.**

# கவிமணி

வித்துவான் மு. சண்முகம்பிள்ளை

(தினமணிச் சுடர்)

(முன் தொடர்ச்சி)

நினைவு நிலையங்கள்

கவிமணி பிறந்த பிரதேசமாகிய நாஞ்சில் வளநாட்டில் அவர்களை அறியாதார் இலர். அந் நாட்டில் பெரும்பான்மையான ஊர்களிலுள்ள பொது நூல் நிலையங்களில் எல்லாம் கவிமணியின் உருவப் படம் விளங்குதல் காணலாம். நாஞ்சில் நாட்டார், பொதுவாக அவரைப் 'பாட்டா' என்னும் அருமைப் பெயரால் குறிப்பிடுவது வழக்கம். கவிமணி பிறந்த தேரூரிலுள்ள பெருமக்கள் 'கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நினைவு நிலையம்' எனப் பெரியதொரு நூல் நிலையத்தைத் தங்கள் ஊரின் நடு நாயகமாக நிறுவியுள்ளார்கள். நாகர்கோயில் நகரிலே கவிமணி பெயரால் தமிழ் வளர்ச்சிக்கான நிலையங்கள் நிறுவ அன்பர் குழு ஒன்று சில ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறது. அவர்கள் கட்டிவரும் 'கவிமணி நிலையம்' கட்டிடம் பெரும்பான்மையும் உருவாகியுள்ளது. கவிமணி அவர்கள் உபயோகித்து வந்த புத்தகங்கள் யாவும் இந்த நிலையத்திற்கு அளித்துள்ளார்கள். இது போன்ற பல நினைவு நிலையங்கள் இனித் தமிழ் நாடெங்கணும் தோன்றுதல் கூடும்.

இலக்கிய நண்பர்கள்

திருவனந்தபுரத்தில் வாழ்ந்த போது, அங்கு வசித்த பல தமிழன்பர்களுடன் கூடிக் கவிமணி தமிழாராய்ந்தார் தமிழறிஞர் நீதிபதி ஸ்ரீ கே ஜி. சேஷையர் இவர்களிடம்

பேரன்பு கொண்டவர். இசைத் தமிழ்ச் செல்வர் இலக்குமணப் பிள்ளை, பேராசிரியர் கே. என். சிவராஜ பிள்ளை, கே. என். குமரேச பிள்ளை, பண்டித முத்துசாமிப் பள்ளை, கே ஜி சங்கரய்யர், பேராசிரியர் எஸ். வையாபுரி பிள்ளை முதலியவர்களுடன் தமிழ் விருந்து நுகர்ந்து மகிழ்ந்தனர். சுமார் நான்கு வருடங்கள் வையாபுரிப் பிள்ளையவர்களும், கவிமணியவர்களும் அடுத்தடுத்த வீடுகளில் வாசம் செய்தனர் அப்பொழுது வையாபுரிப் பிள்ளையவர்கள் ஹைகோர்ட் வக்கீலாகத் திருவனந்தபுரத்தில் இருந்தார்கள். பிள்ளையவர்களும், கவிமணி அவர்களும் நெருங்கிய நண்பர்களாய், சகோதரர்களாய் ஆகிவிட்டனர். 'சைவப்பிரகாச சபை' என்னும் தமிழ் நிலையத்தில் ஞாயிற்றுக் கிழமைதோறும் தமிழன்பர்கள் ஒன்றுகூடித் 'திருக்குறள் ஆராய்ச்சி' . முதலியன நடத்தி வந்தனர். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியராகச் சென்னை வந்தபின் சென்னை அன்பர்கள் முதலியோரும், கவிமணி அவர்களுக்கு அறிமுகமாயினர். சரித்திரப் பேராசிரியர் ஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரியார், பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் முதலியவர்களது பழக்கம் ஏற்பட்டது. தமிழ் லெக்ஸிகன்வேலை நடைபெற்றபோது அதன் கௌரவ உசாத் துணைவராக இருந்து தமிழ் இலக்கியச் சொற்கள், முக்கியமாகச் சாசனப் பதங்கள் பற்றி அவ்வப்போது உதவி வந்தார்கள். அவர்களுடைய சாசன ஆராய்ச்சிக் குறிப்புக்கள் பல ஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்களுக்கும் பயன்பட்டன.

## பிறர்க்குதவும் பெருந்தகை

தாம் அரிதில் ஆராய்ந்து கண்ட செய்திகளையும், முடிவுகளையும் பிறருக்குத் தாராளமாகக் கூறி உதவி புரிந்து வந்தார் கவிமணி. போஜராஜன் சபையில் தலைசிறந்து விளங்கிய காளிதாச மகாகவி சாதாரண நிலையிலுள்ள சிலர் பொருட்டு மனமிரங்கிக் கவிபாடியளித்து மன்னரால் சன்மானம் பெறச் செய்ததாகச் சரித்திரம் சொல்லுகிறது. நமது கவிமணியும் பிறர் பொருட்டாகப் பாடி கொடுத்த கவிதைகளும் பல உண்டு ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜா சஷ்டியப்த பூர்த்தியின்போது ஒரு நண்பருக்காக மன்னர்மேல் பல பாடல்களைப் பாடிக் கொடுத்து அக் கவிதைகளைப் பாராட்டிச் சிறப்புக் கவியொன்றும் தாமே எழுதியளித்து, மன்னரது பரிசில் பெறக் காரணமாக இருந்தார், இங்ஙனம் பிறர் பொருட்டுப் பாடிக் கொடுத்த பாடல்களைப் பின்பு அவர்களது கவிதைத் தொகுதியில் சேர்த்துவிடலாம் எனக் கேட்டபொழுது, அவற்றைச் சேர்க்கக்கூடாது என மறுத்துவிட்டார்கள். வித்வான் செ. சதாசிவம் பிள்ளை எழுதிய 'சேரநாடும் செந்தமிழும்' என்ற நூலுக்குப் பல செய்திகளைத் தெரிவித்து உதவியவர்கள் அவர்களே. சென்னை சர்வகலாசாலை சரித்திரப் பேராசிரியாக இப்பொழுது விளங்கும் கே. கனகசபாபதிப் பிள்ளை, அவர்கள் சமீப காலத்தில் வெளியிட்ட 'சுசீந்திரம் கோவில்' பற்றிய ஆங்கில நூலுக்குக் கவிமணி பற்பல ஆலோசனைகள் கூறி தமது குறிப்புக்கள் பலவற்றை உதவியதோடு சுசிந்திரம் சென்று சிலநாள் உடனிருந்தும், உதவி புரிந்தனர். பேராசிரியர் பிள்ளையவர்களும் தமது நன்றியைக் காட்டும் பொருட்டுத் தமது ஆராய்ச்சி நூலைக் கவிமணி அவர்களுக்கு உரிமையாக்கியிருக்கிறார்கள்.

## திருமகளும் கலைமகளும்

நமது நாட்டில் 'திருமகளும் கலைமகளும்' சிறக்க வேண்டும் என்று வாழ்த்தியிருக்கிறார் கவிமணி. கல்விச் செல்வமும், பொருட் செல்வமும் ஒருவர் பெற்றிருத்தல், அதுவும் வாழ்நாள் முழுவதும் அடைந்திருத்தல் ஒரு பெரும் பாக்கியம் அல்லவா? கலைமகளும், திருமகளும் கவிமணிக்கு வாழ்க்கையில் கருணை புரிந்தார்கள். 'புலவர் வறுமை' என்ற பேச்சிற்கு இடமின்றி வாழ்ந்தவர் கவிமணி. கருவிலே திருவுடையார் அவர். பெருஞ் செல்வம் சேர்த்து, ஆடம்பர வழிகளில் செலவு செய்ய விரும்பினரில்லை. வாழ்க்கைக்குப் போதிய திரு அவர்களுக்கு வந்து கொண்டிருந்தது. அதைச் சீரிய வழியில் செலவிட்டு நல்ல வண்ணம் வாழ்ந்தார்.

## விருந்தோம்பல்

கவிமணி அவர்களைக் காணச் சென்றவர்கள் யாரும் அவர்களது இல்லத்தில் விருந்துண்ணாது திரும்பியது இல்லை. யார் எந்த நேரத்தில் வந்தாலும், அவர்களுக்கு ஏற்றபடி உபசாரம் நடக்கும். அவரது வாழ்க்கைத் துணைவியார் முதலியோர் அவர்களது கருத்தின்படி மகிழ்ச்சியுடன் கடமையாற்றி வந்தார்கள். 'மட்டிப் பழம்'' என்ற இனிய வாழைப் பழவகை எப்பொழுதும் குலை குலையாகவே வீட்டில் இருந்து வரும். அவர்கள் வழக்கமாகச் சாப்பிடுவதும் இந்த இனிய

வாழைப்பழம்தான். அங்கு செல்பவர்களும் இப்பழத்தின் இனிய சுவையை அறிந்திருப்பார்கள்.

போது வாழ்வு

கவிமணி சமுதாய நலம் கருதிய எல்லா இயக்கங்களுக்கும் தமது ஆதரவை எழுத்து மூலம் நல்கியிருக்கிறார்கள். சமுதாய நலநாட்டத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்; அரசியல் துறையில் மும்முரமாக ஈடுபட்டவர்களல்லர். சுதேச மன்னர் ஆளுகையின் கீழிருந்த தென் கோடிமலைப் பகுதியில் ஒதுங்கி வாழ்ந்தது இதற்கு ஒரு காரணம் எனலாம். ஆயினும் அத்துறை பற்றி நிகழும் நிகழ்ச்சிகளை நன்கு சிந்தித்தவர், உலக நிகழ்ச்சிகளை அன்றாடம் உணர்ந்து கொண்டுதான் இருந்தார். ஆங்கிலத் தினசரிப் பத்திரிகையான ஹிந்துப் பத்திரிகையை வரவழித்து தவறாது வாசித்து வந்தார். இறுதியில் பல மாதங்கள் தானே பார்த்து வாசிக்க கூடாத நிலையிலும்கூட வாசிக்கத் தக்கவர்களை அழைத்து வாசிக்கச் செய்து, நிகழ்ச்சிகளைக் கேட்டு வந்தார்கள். நம் நாடு மட்டுமல்ல; உலகமெங்கும் நிகழும் புதுமைகளை அறிந்ததனால் அவர்கள் எண்ணமும் உலகெங்கும் பரந்து சென்றது. நமது தேசக் கொடியைப் பற்றியும் காங்கிரஸின் லட்சியமான கதர் பற்றியும் பாடியுள்ளார்கள். நமது நாடு சுதந்திரம் பெறும் முன்பே போரில் உலகம் சிக்கியிருந்த காலத்து மனம் புழுங்கிப் பாடிய பாடல்களிலே, 'குடியரசு வேண்டும் சுதந்திரக் கொடி பறக்க வேண்டும்' என்று பாடினார்கள். நமது பாரதத்தின் சுதந்திர விழாவையும் குடியரசுத் திருநாளையும் கண்டு மகிழ்ந்து வாழ்த்தி யிருக்கிறார்கள். சுதந்திர நாட்டில் நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு உழைத்து ஒற்றுமையாய் வாழுதல் வேண்டும் எனவும் வற்புறுத்தி யிருக்கிறார்கள். திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டம் பற்றி தினமணி நிருபர் கவிமணி அவர்களைக் கண்டு கேட்டபொழுது, தெளிவாகத் தமது கருத்தைத் தெரிவித்தார்கள். சில மாதங்களுக்கு முன் தமிழ் நாட்டில் வருங்கால அரசியல் மொழி தமிழாகத்தான் இருத்தல் வேண்டும் எனக் கட்டுரை மூலம் வெளியிட்டனர். இங்ஙனம் அவர்கள் எந்த விஷயத்திலும் விருப்பு வெறுப்பின்றித் தமது மனத்திலுள்ளவற்றை மறையாது வெளியிட்டு வந்திருக்கிறார்கள்.

வாழ்வுக்கு வழிகாட்டி

அமைதியான சாந்தி வாழ்வு வாழ்ந்து சிறந்த சிந்தனையாளராய் விளங்கியவர் கவிமணி. இவ்வுலகமெல்லாம் ஒருடப்பு போல இன்பமுடன் வாழ விரும்பியவர்.

உலக மக்களெல்லாம்—அன்போடு
ஒருதாய் மக்களைப்போல்
கலகமின்றி வாழும்—காலம்
காண வேண்டுமப்பா!

என்று விரும்புகிறார் கவிமணி. அணுக்குண்டு அச்சம் உலகை வாழவைக்காது. அஹிம்சை நெறியே நம்மை வாழ வைக்கும். காந்தியவழியே உலகிற்குகந்த வழி என்கிறார்.

நாச அணுக்குண்டால்-நமக்கு
நன்மை ஏற்படுமோ
நேசமாய் நிதமும்-அஹிம்சை
நெறியைப் போற்றுவமே.
காந்தி மகான் சொன்ன-வழியைக்
கடைப்பிடிக்கு மந்த
மாந்தரே உலகில்-நல்ல
வாழ்வு பெறுவாரையா!

என்பது கவிமணி வாக்கு. உலகில் தொழில்கள் வளர்ந்து செல்வம் பெருகி, ஏழையென்று ஒருவன் இல்லாத சமுதாய நிலை ஏற்பட வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

வாழவேண்டுமெனில்-தொழில்கள்
வளர வேண்டுமையா!
ஏழை யென்றொருவன்-உலகில்
இருக்கலாகாதையா!

இங்ஙனமாக, உலக சமுதாயம் வாழ வழி காட்டி நிற்கிறார் கவிமணி.

நாஞ்சில் நாட்டின் புகழ் ஒளி

கவிமணிபிறந்த நாஞ்சில் நாடு செந்தமிழ் நாடு. ஆனால் பக்கத்திலிருக்கிற திருநெல்வேலிக்காரர்கள் கூட அதனை நன்குணர்வதில்லை. திருவிதாங்கூர், நாஞ்சில் நாடு என்று கேட்டவுடன் தானே அதுஒரு மலையாள நாடென்றும், அங்குள்ளாரெல்லாம் மலையாளிகள் என்றும், அவர்கள் பேசுவது மலையாளமென்றும், தமிழ் நாட்டார் பலர் கருதி வருகின்றனர். 15 லட்சம் தமிழர்கள் நாஞ்சில் நாடு முதலிய திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யப் பிரதேசங்களில் வாழ்கின்றார்கள். தமிழ்ப்பண்பு சிதையாவாறு தமிழைப் போற்றி வாழ்கின்ற பெருமை அவர்களுக்குண்டு. நாஞ்சில் நாடு நற்றமிழ் நாடு என்று அறிந்தது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களால்தான். நாஞ்சில் தமிழகத்தைப் பற்றிக் கவிமணி கவியாலே விளக்கியது, ஒரு பக்கம். கன்னியாகுமரியில் நடந்த தமிழ் நாட்டின் தென் எல்லை மகா நாட்டில் வா வேற்புரையில் பற்பல ஆதாரங்கள் காட்டி பேசிய கவிஞன் குரலையும் தமிழகம் உணர்ந்திருக்கும்.

பண்ணைப் பெருத்த பழநாடு-சுற்றிப்
பார்த்திடக் கண்கள் குளிரும் நாடு
மண்ணையும் பொன்னாக மாற்றும்
நாடு-கவி
வாணர் புகழும் தமிழ் நாடு.

என்று அறிமுகம் செய்திருக்கிறார் கவிமணி. அவர்கள் குமரி எல்லை மகாநாட்டில்,

தென்னெல்லை காத்தாளும்
தேவி! குமரீ! நின்
பொன்னடியைக் கும்பிட்டுப்
போற்றுகின்றேன்-மன்னுபுகழ்
செந்தமிழ் நாடு ஒன்றாகித்
தேவர் நாடொத்து, உலகில்
சந்ததமும் வாழ வரம் தா!

என்று அவர்கள் வேண்டியபடி ஒன்றான செந்தமிழ் நாட்டைக் காணும் இதுவரையில் அவர்கள் வாழவில்லை. எனினும் நமது கவிமணியின் வாக்கு நிறைவேறும் என்பது உறுதியே.

## செப்டம்பர் மாதத்துச் செந்தமிழ்க் கவிஞர்கள்

33 வருடங்களுக்கு முன் கவிஞர் பாரதியார் செப்டம்பர் மாதம் 11-ம் தேதி அமரநிலை எய்தினார். இப்பொழுது செப்டம்பர் 26-ம் தேதி பாரதிக்குப் பின் தமிழ்க் கவிஞர் உலகில் ஒளிசெய்து விளங்கிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மறைந்துவிட்டார். செப்டம்பர் மாதம் செந்தமிழ்ப் பெருங் கவிஞர்களை நினைவூட்டும் மாதமாகி விட்டது இந்த இருபெரும் கவிஞர்களும் உலகம் வாழப் பிறந்த உத்தமர்கள். இவர்கள் அளித்துள்ள தமிழ்க் கருவூலங்கள் நமக்குக் கிடைத்தற்கரிய பெரு நிதியாகும். இப் பெரியார்களது லட்சியங்களைப் போற்றித் தமிழகம் புகழ் சிறந்து ஓங்குவதாக!

---

# 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட 'ஐ. நா.' தந்தை

'ஐ நா.' எனப்படும் ஐக்கிய நாடுகள் சபை உலகத்தை அமைதியில் நிறுத்தத் தோன்றியது. அக்டோபர் 24 அதனுடைய திருநாள். அமெரிக்க நாட்டு அரசியற் பேரறிஞர் 'கார்டல் ஹல்' என்பவர் அதனைத் தோற்றுவிக்கப் பெரிதும் பாடுபட்டவர். நாம் காந்தியடிகளை நம் 'தேசத்தந்தை' என்பது போல, ஐ நா. சபையினர் 'ஹல்' அவர்களை 'ஐ. நா. தந்தை' என்கின்றனர். அவர்பிறந்த நாள் அக்டேபர் 2ஆம் நாள். காந்தியடிகள் பிறந்த நாளும் அதுவே. இரண்டுபேருமே உலக அமைதியில் மிகுதியும் கருத்துடையவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆயினும் 'ஹல்' அவர்கள் உரிமையோடும், செல்வம் செல்வாக்கோடும் திகழ்ந்த அமெரிக்க நாட்டில் பிறந்ததனால் 'ஐ. நா.' சபையைத் தோற்றுவிக்கும் வாய்ப்பைப் பெற்றுச் சிறப்புற்றார்.

நிற்க, உலக அமைதியை ஐ. நா. சபை எவ்வாறு பாதுகாத்து வருகின்றது என்பது செய்தித்தாள் படிப்பவர்களுக்கு நன்கு தெரியும். அது முன்னின்று போரையும் நடத்துகின்றது! ஏதோ ஒப்புக்கு உறவாடி, ஒருவர் வலுவை ஒருவர் உறவு பார்க்கும் உருட்டல் மிரட்டல், இடமாகத்தான் இன்றைய ஐ. நா. காட்சியளிக்கிறதே தவிர உருப்படியான செய்கையில் அது உண்மைக் கருத்துச் செலுத்துவதாகத் தெரியவில்லை.

அரசியல் தந்திரங்களும், ஆகாவழிப் போக்குகளும், நடுநிலை பிறழ்ந்த நிலைகளுந்தான் அங்கே நிழலாடுகின்றன. இல்லையேல் 61 கோடி மக்களைக் கொண்ட செஞ்சீனாவுக்கு ஐ. நா. வில் இடமில்லாமல் இருக்கமுடியுமா? அதற்கு இடந்தர மறுத்துவரும் அமெரிக்காவை எதிர்த்துத்துணிவாகச் செயலாற்றும் தகுதியும் வீரமும் பிரிட்டன் போன்ற வற்றுக்கூட வாராமல் இருக்குமா?

உலகத்தை அச்சமற்ற அமைதி நிலையில் 1800 ஆண்டுகட்குப் பிறகாவது (இப்போதைய போக்கிலேயே போனால்) இந்த ஐ. நா. சபை நிறுத்துமா? என்று எண்ண வேண்டியிருகிற நிலையில் அதனை ஒற்றுமைப் படுத்த 1800 ஆண்டுகட்கு முன்னரே ஒருவர் வேலை செய்திருக்கிறார் என்று சொல்லி அவரை ஐ நா. வின் தந்தை என்றும் குறிப்பிட்டால் எவர்தாம் வியவாதிரார்.

ஐ நா. சபை அண்மையில் இரண்டாவது உலகப் பெரும் போருக்குப்பிறகுதோன்றியதே. அதன் தந்தை 'கார்டல் ஹல்' தான் ஆனாலும், 1800 ஆண்டுகட்கு முற்பட்ட ஒருவர் அதன் நோக்கத்துக்கு முழுதாக ஒத்த அடிப்படைக் கருத்துக்களைக் கொடுத்திருப்பாரானால், அவற்றின் வழிச் சென்றால் தான் இந்த ஐ நா. சபையும் தன் குறிக்கோளை அடையமுடியும் என்றால், அவரையும் ஏன் 'ஐ. நா. தந்தை' என்று சொல்லக் கூடாது?

இன்று, ஐ. நா. சபையின் நோக்கமெல்லாம் உலகத்தில் அரசியல் நெருக்கடிகள், போர்ப் பூசல்கள் உண்டாகக் கூடாது என்பது மட்டுமே. ஆனால் இங்கே சுட்டப் பெறும் ஐ. நா.

தத்தை அரசியலில் மட்டுமன்று, எல்லாத் துறைகளிலும் உலகம் ஒற்றுமை கொள்ளத்தக்க அடிப்படை உண்மைகளை விளக்கியவர். அவர் வழி நின்றால் "ஒரே உலகம்" என்று சொல்லப் பெறும், (உலகமுழுதுக்கும் ஒரே ஆட்சி) நிலைகூட உண்டாகும் என்பது உறுதி; ஆனல் நின்றால்தானே!

அப்படிப்பட்ட உலகத்தலைவர் யார்! என்றால் அவரே தெய்வத் திருவள்ளுவர். திருவள்ளுவர் வழி நின்றால் உலகம் ஒற்றுமைப்படும் உண்மையில் நிலைக்கும், உயரும் என்பது உறுதி. இதனை மறுப்பவர்களும் உண்டா? உண்டானல் அவர்கள் திருக்குறளை படிக்காதவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களிடம் திருக்குறளைக் கொடுத்துப் படிக்கச்செய்ய வேண்டும்.

திருவள்ளுவர் கொடுத்துவிட்டுப்போன திருக்குறள் அத்தகையது. உலகமுழுதும் ஒப்புக் கொள்ளத்தக்க முறையில் அது உண்மைகளை விளக்கும். இவ்வகையில் அதற்கு இணை அதுவேதான். உலக மொழிகளில், உலக நாடுகளில் எதிலும் அது போன்ற நூல் இன்றுவரை எழவில்லை. நாடு மொழி சமயம் கடந்து நடுநிலை பிறழாமல் உண்மைகளை உரைப்பது அது.

இத்தகு சிறப்புடைத் திருக்குறள் 1800 ஆண்டுகட்கு முன்னரே நம் தமிழ் மொழியில் தோன்றிச் சிறிதும் சிதையாமல் முற்றுகக் கிடைத்திருப்பது நமக்குப் பெரும்பேறு. பெறலரும் இப் பெரும் பேற்றைப் பெற்றும், அதனை நாம் தக்கபடி அறிந்து கொள்ளாமலும், உலகவர்களும் அறிந்து பயன் கொள்ளும்படி செய்யாமலும் இருப்பதை எண்ணுகிற போது வருத்தமாகத்தான் இருக்கிறது.

எங்கும் தமிழ் முழக்கம், திருக்குறள் கிளர்ச்சி கேட்கப்படுகிற இக்காளிலும், எல்லாம் வெற்றுரவார நிகழ்ச்சியைப் போன்றனவே ஒழிய, ஆழ்ந்த ஆக்கப் போக்கில் அவைகள் இன்னும் நிலைக்கவில்லை; நிலைக்க வேண்டும்.

நிலைப்பதற்குத் தோன்றியிருப்பதே எங்கள் குருகுலம்! 1800 ஆண்டுகளாக வித்துநிலையிலேயே உள்ள திருக்குறளை விளைவித்துச் செயற்படுத்திக் காண வேண்டும் என்பதே இக் குருகுலத்தின் நோக்கம்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றார் திருக்குறள் தத்தை உணர்ந்து, நாட்டுப்புலவர் பாரதியார். அந்த வான் புகழ் உள்ளபடியே பெற வேண்டியது தமிழர் கடமை! அதற்குத் திருக்குறள் உலக மன்றத்தில், ஐ. நா. சபையில் ஏற்றவேண்டும். அதற்கான ஆக்கப்பணிகளை, கிளர்ச்சிகளைச் செய்யவேண்டும்.

குருகுலம் இத்தகைய ஆக்கப் பணிகளை, கிளர்ச்சிகளைச் செய்ய விழைகிறது! திருக்குறள் வழியிலேயே இயங்கிச் செய்ய முயல்கின்றது. அதைப்போன்ற வேறோர் அமைப்பு எங்குமில்லை. இந்நாட்டில் காட்டலாம்; இருந்தால் நல்லதுதான்; பின்பற்றலாம்! குருகுலத்திற்கு பல்லாற்றானும் உதவியாக இருக்கவேண்டுவதும், அதிற்சேர்ந்து பயன் மிகுக்க வேண்டியதும் தமிழ் மக்கள் அனைவருடைய சிறப்புக் கடமையாகும், இதில் கட்சி, சமயம் முதலிய எந்த வகையான வேறுபாடும் இருக்கவேண்டியதில்லை; தமிழர்க்குள்ளும் இருக்க வேண்டியதில்லை. யாரும் குருகுலத்தில் ஈடுபட்டு இப்பணிகளைச் செய்யலாம். வாழ்க திருவள்ளுவர்! வெல்க திருக்குறள்!

—ந. ரா ஆடலரசு

## முல்லைக் கொடி

(குருகுலக் கிழமை வெளியீடு)

புதிய ஆண்டு, இக் கலைமகள் விழாவிலிருந்து தொடங்கியது.

7-ம் கிளை

8-10-54 வெள்ளிக் கிழமையிலிருந்து வெளிவருகின்றது.

நேயர்கள், தமது புத்தாண்டுக் கையொப்பத்தைப் புதுப்பித்துக்கொள்வார்களாக!

—கண்காணிப்பாளர்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம், (அஞ்)